ஓம்.

வந்தேமாதரம்.

உதயபாரதி

UDAYA BHARATI.

ஓர் இனிய தமிழ் மாதப் பத்திரிகை.

மலர் க.	1927-ம் வருஷம் ஜனவரி மீ அக்ஷய-வருஷம் தை மீ	இதழ் ச.

OFFICE OF THE REGISTRAR
11 FEB 1927

கீதாஞ்சலி.

காரினம் புரைமேனி நல்கதிர் முத்தவெண்ணகைச் செய்யவாய்
ஆரமார்வ னரங்கனென்னும் அரும்பெருஞ் சுடரொன்றினை
சேரும் நெஞ்சின ராகிச்சேர்ந்து கசிந்திழிந்தகண் ணீர்களால்
வாரநிற்பவர் தாளிணைக்குஓர் வாரமாகுமென் னெஞ்சமே.
(குலசேகர ஆழ்வார்.)

போதெல்லாம் போதுகொண்டுன் பொன்னடி புனையமாட்டேன்
தீதிலாமொழிகள் கொண்டுன் திருக்குணம் செப்பமாட்டேன்
காதலால் நெஞ்சமன்பு கலந்திலே னதுதன்னாலே
ஏதிலே னரங்கர்க்கல்லே னென்செய்வான் தோன்றினேனே.
(தொண்டரடிப்பொடி ஆழ்வார்)

* * *

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாத நாமம் நமச்சிவாயவே. (திருஞானசம்பந்தர்)

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே. (திருநாவுக்கரசர்)

தேசபந்து ஸ்ரீமான்,

ஜியார்ஜ் ஜோஸப் அவர்கள்.

உதயபாரதிக்கு அனுப்பிய நற்செய்தி.

ஐரோப்பியர்கள் கையிலிருந்து சக்தியையும், சக்திக் குரிய ஸ்தாபனங்களையும் தனக்கு மாற்றிக்கொள்ள வேண்டுவதைத் தவிர இந்தியாவின் ராஜீயப் போர் வேறில்லை. அடிப்படையான உண்மை இதைத் தவிர வேறில்லை. மாற்றப் படுவதின் அளவும், வேகமும் வித்தியாசப் படலாம்; ஆனால் மாற்றத்தின் நிச்சயமும் வழியும் பற்றி ஒரு சந்தேகமும் இருக்கக் கூடாது.

அரசியல் வாதியாகிய நான் அதன் வரிசைக் கிரமத்தைக் கவனிக்கக் கூடாது.

நாம் சக்தி யுள்ள ஒரு அரசியலையும் அதே மாதிரி சக்திக் குரிய பாத்திரங்களையும் அபிவிருத்தி செய்வோம். அவைகளிற் சிலகாலியாக விருக்கலாம், சில நம் கையில் உடைந்தும் விடலாம் — என்றாலும் பறிப்பதும் கைப்பற்றுவதும் ஓயாமலும் உறுதியுடனும் நடக்க வேண்டும். மந்திரி ஸ்தானங்களும், அரசாங்க சபைகளும், கோர்ட்டுகளும், சைனியமும் எல்லாம் கைப்பற்றப் படுவதற்கு நம்மை அழைக்கின்றன.

அக்ஷயஹ்ஸ மார்கழி மீ 29உ

மதுரை.

"படித்த இந்தியன் அன்னியத் துணி அணிந்திருப்பதைக் காண என் கண்ணில் கண்ணீர் ததும்புகின்றது."

ஸ்ரீ ச. ராஜகோபாலாச்சாரியார்.

உதயபாரதி.

அக்ஷய௵ தை௴ ௧-௨

ஸ்வாமி சிரத்தானந்த சன்னியாசி.

இந்தியா துறவிகள் பெருத்த நாடு, ஆத்ம சக்தி நிறையப் பெற்ற நாடு. சன்னியாசி என்றால் ஹிந்துக்கள் தலை குனிந்து வணங்குவார்கள். இந்நாட்டுத் துறவிகளின் பெருமை உலகம் அறிந்த தொன்று. மகா வீரனான அலெக்ஸாந்தர் இந்தியாவிற்கு வரும்பொழுது, தன் மத குருவிடம் அவருக்கு உகந்த எந்தப் பொருள் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட வேண்டும் என்று கேட்டதற்கு, அவர் துறவி யொருவரை அழைத்து வரும்படி கேட்டாராம். அதன்படி அவ் வீரன் இந்தியா முழுதும் அலைந்து கானகத்தில் நிஷ்டையிலிருந்த ஒரு துறவியைக் கண்டு அழைத்தான். துறவி மறுத்ததின் மேல் அவ் வீரன் தன் வாளை ஓங்கிப் பயமுறுத்தினான். ஆனால் துறவியின் ஆத்ம சக்தியை அறிந்து சற்று நேரத்தில் அவன் கையிலிருந்த வாளை நழுவ விட்டு விட்டான். மணி முடி தாங்கிய மன்னரை சயித்த அவன் கர்வம் சடைமுடி தாங்கிய அத் துறவியால் அடக்கப்பட்டு விட்டது. சன்னியாசிகள் உலகோருக்குப் பயன்படும் பொருள்களை யுண்ணாது, மரத்திலுள்ள கனிகள் பக்ஷிகளுக்குப் பயன்படுமாதலால் அவற்றையுங்கூட விலக்கி, உதிர்ந்த கனிகளையும், காய்களையும், கிழங்குகளையும் உண்பார்கள். சுவாசம் விடுவதாற்கூட பிறருக்குக் கெடுதல் உண்டாகி விடுகின்றது என்று எண்ணி காருண்ய வடிவினர்களாகிய அவர்கள் சுவாசத்தையும் அடக்கி நிஷ்டையில் அமர்ந்து விடுகின்றனர். ஆகையால் தான் இந்தியா சன்னியாசிகளை வணங்குகின்றது.

ஸ்வாமி சிரத்தானந்தர் ஒரு பெரிய சன்னியாசி. பூர்வாஸ்ரமத்தில் இவருக்கு லாலா முன்ஷிராம் என்று பெயர். ஸ்வாமி தயானந்த சரஸ்வதி இவருடைய குரு. வேதங்களே பிரமாணம் என்று வேதங்கள் விதிக்காததை ஏற்றுக் கொள்ள மறுக்கும் ஆரிய சமாஜத்தை இவர் சார்ந்தவர். இவர் வேத, சாஸ்திர ஆராய்ச்சியிலும், கல்வி கேள்விகளிலும் மிகச் சிறந்தவர். ஹிந்து

மதத்தில் குன்ருத பற்றுடன் விளங்கியது மன்னியில் அதில் இடையே சேர்ந்துள்ள மாசுகளை நீக்கவும், அதை அபிவிருத்தியடையச் செய்யவும் தன் வாழ் நாளில் பெரும் பாகத்தை இவர் செலவழித்தார்.

இந்திய நாடு அரசியல் விஷயத்தில் மட்டு மன்றி, ஆசாரம், கல்வி முதலிய விஷயங்களிலும் பிற நாட்டார்க்கு அடிமைப் பட்டுக் கிடப்பதை நீக்க இவர் செய்துள்ள முயற்சிகள் பல. தற்காலம் இந்தியாவில் அரசாங்க அதிகாரத்திற் குட் பட்ட கலாசாலைகளுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் காரண பூதரா யிருந்த மகாலே பிரபு ஆங்கிலக் கல்வி மூலமாய் இந்தியாவை வெகு சீக்கிரத்தில் கிறிஸ்தவ மயமாக ஆக்கி விடலாம் என்று நம்பி யிருந்தார். என்றைக்கு இந் நாட்டின் மேல் பிற நாட்டாரின் கல்வி முறைகள் சுமத்தப் பட்டனவோ, என்றைக்கு தேச பாஷைகளும் இலக்கியங்களும் புறக்கணிக்கப்பட்டு, ஆங்கிலபாஷையும், மேல் திசை நாகரீகமும் பிரதானமாக விளங்க ஆரம்பித்தனவோ அன்று தான் இந் நாடு பூரணமாய் அடிமையாயிற்று. இதை நன்கு அறிந்த ஸ்வாமி சிரத்தானந்தர் வட இந்தியாவில் ஹரித்துவாரத்திற்கு சமீபத்தில் காங்கிரி என்னு மிடத்தில் பெரிய தோர் குரு குலத்தை ஏற் படுத்தி நடத்திஞர். ஆரம்பத்தில் அவரும் ஒரு சிஷ்யனும் சென்று காடாயிருந்த இடத்தைத் திருத்தி ஒரு குடிசை கட்டி வாழ ஆரம்பித்தனர். அதன் பின்னர் நாளடைவில் அது விருத்தியாகி ஏராளமான மாணவர்களுடன் இந்தியாவின் வைஸிராய் களாலும், பிற நாட்டு அறிஞர்களாலும் போற்றப் பட்டு இன்று காங்கிரி குருகுலம் என்று விளங்குகின்றது. அங்கு இளைஞர் களுக்கு வேதங்களும், நம் நாட்டுக் கலைகளும் கற்பிக்கப் படுகின்றன. தற் சமயம் குருகுலத்தின் சொத்துக்கள் அனேக லக்ஷ ரூபாய்க்கு மதிப்பிடப் படுகின்றன. இதற்கு ஸ்வாமி தன்னிட மிருந்த 50,000 ரூபாய் பெறுமான புஸ்தகங்களை அளித்திருக்கின்ருர். சுருங்கச் சொல்லின் ஸ்வாமி தமது சிறந்த அறிவையும், அனுபவ ஞானத்தையும், உடலையும், பொருளையும் தாம் பெற்று வளர்த்த குரு குலத்திற்காக அளித்து விட்டார். முப்பது வருஷங்களுக்கு முன் வக்கீல் தொழில் பார்த்துக் கொண்டிருந்த இப்பெரியார், அதை

விடுத்து, குருகுலத்திற்குத் தலைமை வகித்து வெகு சிறப்பாக நடத்தி வந்தார். குரு குலத்திற்கு இப்பொழுது வயது இருபத்தைந்து.

ஸ்வாமிகள் தேசத்தின் நெருக்கடியான நிலைமையைக் கண்டு வனத்தில் தன் தவ நிலையத்தில் இருந்தால் பயனில்லையென்பதை யெண்ணி குரு குலத்தை ஒரு பஞ்சாயத்தாரிடம் ஒப்புவித்து விட்டு வெளிப் போந்து, தேசத் தலைவர்களுடன் கலந்து கொண்டு வேலை செய்ய ஆரம்பித்தார். எட்டு வருஷத்திற்கு முந்தி பஞ்சாப் நாட்டில் நிகழ்ந்த அநீதி களின் பயனாய், ஜலியன் வாலா பாக்கில் சுட்டுக் கொல்லப் பட்ட நிரபராதிகள், குழந்தைகளின் இரத்தமும், மக்கள் அல்லற் பட்டு ஆற்றாது அழுத கண்ணீரும் ஒருங்கு சேர்ந்து ஓடிய வெள்ளத்தில் ஸ்வாமி தம் உயர்ந்த பீடத்தி லிருந்து கீழே இழுத்து வரப்பட்டார். ரௌலட் சட்டத்தையும், ராணுவ அமுலையும் எதிர்ப்பதற்கு ஸ்வாமி அஞ்சா நெஞ்சுடன் வேலை செய்தார். டில்லியில் சத்தியாக்ரக வாரக் கொண்டாட்டத்தில் கூர்க்க சிபாய்கள் குத்தி விடுவதாய்ப் பய முறுத்திய காலத்தில் ஸ்வாமி முன்னே நின்று, தம் மலை போன்ற மார்பைக் காட்டி ஈட்டியால் குத்தும்படி சொன்னார். ஸ்வாமி குண்டு மழை பொழியினும் அஞ்சார், ஈட்டிகள் முன்பும் சத்தியத்தையே மொழிவார்.

ஸ்வாமி ஒரு ஆசார சீர் திருத்தக்காரர். ஹிந்து மதத்தைச் சார்ந்த எட்டுக் கோடி மக்கள் தாழ்த்தப்பட்டு, நாய்களும் கழுதைகளுங் கூட அனுமதிக்கப்படும் தெருக்களில் வரக் கூடாதென்று நம்மால் துரத்தப் படுவதைக் கண்டு ஸ்வாமி இரங்கி எப்படி யாவது ஹிந்து மதத்தைச் சூழ்ந்துள்ள இவ் வந்தகாரப், இந்த இழுக்கு நீக்கப்பட வேண்டுமென்று பெரு முயற்சி செய்தார். அவர் ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் உற்ற நண்பராய் விளங்கினார். கருணையும், வீரமும், நல்லறிவும் பெற்று வாழ்ந்த ஸ்வாமி, 'இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்' என்பதை யறிந்து வழிபட்டார்.

ஹிந்து மதத்தில் ஸ்வாமிக்கு இருந்த பற்றும் ஆர்வமும் வேறெவர்க்கும் தாழ்ந்ததில்லை. அவருடைய மதாபிமானமும்,

அரசியலும், கல்வி அபிவிருத்தியும், தாழ்த்தப் பட்டவர்க்கு ஊழியமும் எல்லாம் ஒன்றுக்கொன்று முரண்படாத உன்னத தத்துவங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு நிகழ்ந்தன. அவர் செய்த சகல செய்கைகளுக்கும் அடிப்படை, ஜீவதாது அன்பு தான். பிறமதம் புகுந்த ஹிந்துக்களை மீண்டும் ஹிந்து மதத்தில் சேர்க்கும் இயக்கம் சுத்தி எனப்படும், அப்படிச் சேர்க்கப் பட்டவர்களை இதரர்களோடு ஐக்கியப் படுத்துவது சங்கடன் என்பது. இவ்வியக்கங்களை ஸ்வாமி ஆரம்பித்ததும், மால்கானு ராஜபுத்திரர்களை ஹிந்து மதத்தில் சேர்த்துக் கொண்டதும் அனேக மகமதிய சகோதரர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்களிற் சிலர் ஸ்வாமியின் நோக்கத்தையும் வழிகளையும் சந்தேகித்தனர். நாளடைவில் ஹிந்து மகமதிய துவேஷம் அதிகரித்துக் கொண்டேவந்த வட இந்தியாவில் பல பூசல்களும் நிகழ்ந்தன.

கடைசியாக வாழ்வு முழுதும் சுத்தவீரனாய், தியாகமூர்த்தியாய்விளங்கிவந்த ஸ்வாமிகள், நோயுற்றுத் தளர்ந்து டில்லியில் படுத்த படுக்கையாய்க் கிடந்தபொழுது, சென்ற மார்கழிமீ 8-ம்உ வியாழக்கிழமை மாலை 4-மணிக்கு அப்துல் ரஷீத் என்ற ஒரு பாதகனால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். கொலையாளி ஸ்வாமியிடம் மத விஷயமாய்ப் பேசப்போவதாக ஏமாற்றி அனுமதிபெற்று, கபடமாய் நிராயுத பாணியாயிருந்த அவரைக் கொன்றது, கொலையின் கொரோத்தை அதிகரிக்கச்செய்கின்றது. ஸ்வாமியைக் காப்பாற்ற ஓடிவந்த சமையல்காரர் தர்மசிங் என்பவரும் படுகாயப்பட்டு பின்னால் இறந்தும் போனார். அப்துல் ரஷித், 'இஸ்லாம் மார்க்க விரோதி'யான ஸ்வாமியைக் கொன்றுவிட்டால் தனக்கு முக்தி கிடைக்குமென்று நம்பியதாகப் பின்னால் சொல்லியிருக்கிறான்.

ஸ்வாமியின் கோரமான மரணம் இந்நாட்டையே திடுக்கிடச் செய்துவிட்டது. அறிவிழந்த மதவெறி பிடித்த ஒருவன் செய்த இப்பாதகத்தைத் தேசத்திலுள்ள மகமதியத் தலைவர்கள் அழுத்தமாகக் கண்டித்திருக்கின்றார்கள். ஸ்வாமிகள் கடைசி காலத்தில் என்ன சொன்னார்களென்பது ஒருவருக்கும் தெரியவில்லை. ஆனால் என்ன சொல்லியிருக்கக் கூடுமெனின், 'அறியா

மற் செய்துவிட்டான். ஆண்டவனே! அவனையும் மன்னித்து ஆட்கொள்ள வேண்டும்' என்றே கடவுளிடம் கூவியிருப்பார் என்று நாம் எண்ணுகிறேம்.

ஹிந்து-முஸ்லீம் பிணக்கால் தேசத்தில் ஏற்பட்ட விபரீத செயல்களுக்கும், வெறும் மதவெறி கொண்டவர்களின் அடாத செயல்களுக்கும், ஸ்வாமி சிரத்தானந்தரின் கொலையே கடைசியாக இருக்கட்டும். ஆத்திரத்துடனும் வெறியுடனும் கொடூரமான செய்கைகளால் எந்த மதமும் முன்னேற்ற மடைய முடியாது. தனிப்பட்ட ஒருவர் இருவர் செய்யும் அடாத செயலை ஒரு சமூகத்தின் மேல் சுமத்துவது சரியல்ல. மகாத்மா காந்தி கூறியதுபோல், ஒரு முஸ்லிம் ஒரு ஹிந்துவைக் கொன்றுவிட்டான், என்பதை மறந்து, ஒரு பேடி வீரன் ஒருவனைக் கொன்றதாக நாம் எடுத்துக் கொள்வோம். தங்கள் பொறுப்பையும் கௌரவத்தையும் இழந்து மதவிஷயமான செய்திகளைப் பற்றி வரம்புமீறி எழுதி கேடு விளைவித்து வந்த வடநாட்டிலுள்ள பத்திரிகைகளை மகாத்மா அழுத்தமாகக் கண்டிக்கிறார். அவற்றை 'நடமாடும் பிளேக்' நோயென்று அவர் கூறியிருப்பது சாலவும் பொருத்தமே. இனியாவது பத்திரிகைகள் விஷமப்பிரசாரத்தை நிறுத்தவேண்டும். இந்தியாவின் பல விடங்களிலும் ஸ்வாமியின் மரணத்தைக் குறிததுப் பெருங்கூட்டங்கள் கூடி கொலையைக் கண்டித்திருக்கின்றன. சமூக ஒற்றுமையைப் பற்றி பின்னர் உதயபாரதியில் சில கட்டுரைகள் வெளிவரும். இந்தியாவின் இரண்டு கண்களுக்கொப்பான ஹிந்து முஸ்லிம் சமூகத்தினர் உள்ளன்புடன் ஒன்றுபட்டு, சுதந்திர யுத்தத்தில் மட்டுமன்றி என்றும் சாசுவத சகோதர உணர்ச்சியுடன், தெய்வத்தையும், தாய் நாட்டையும், மனச்சாக்ஷியையும் மதித்து நடக்கும்படி இறைவன் அருள புரிவானாக.

பொய்யுடம்பு நீத்துப் புகழுடம்பெய்திய புண்ணியர் ஸ்வாமி சிரத்தானந்தரின் புனித ஆத்மா சாந்தியடைக.

கௌஹாத்தி காங்கிரஸ்.

அஸ்ஸாம் இயற்கை வளம்செழித்த பூமி. பனி தவழும் அதன் பர்வதங்களும், சோலைகளும், பெரிய சமவெளிகளும், பெரியார் மனம்போலத் தெளிவாய் ஓடும் நீரோடைகளும், சோலைகளும்- எல்லாம் கண்ணைப் பறிக்கும் எழில் கொண்டன. அது வசிஷ்டர், காலவர் முதலிய ரிஷிகளும், மஹாவீரர்களும் வசித்துவந்த நாடு. கௌஹாத்தி அதன் முக்கிய நகரங்களி லொன்று.

இந்திய தேசிய காங்கிரசின் 41-வது கூட்டம் சென்ற மார்கழிமீ 11-உ அஸ்ஸாமிலுள்ள கௌகாத்தி நகரில்கூடியது. தேசத் திருப்பணிக்கு விரதம் பூண்ட பெரியாரும், அகில பாரதமும் ஒப்பற்ற பெருந் தலைவரென்று போற்றும தமிழ் நாட்டின் தவப் புதல்வராய ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் இப்பெரும் மகாநாட்டில் தலைமை வகித்து மிகத் திறமையுடன் நடத்தி வைத்தது நம்மவர்க்குப் பெருமையே யாகும். அக்கிராசனர் முன்னுரையும், வரவேற்புக் கழகத் தலைவர் ஸ்ரீமான் பூக்கனின் வரவேற்புப் பிரசங்கமும் கக்ஷி பேதங்களை ஒழிப்பதற்கும், வெறும் பேச்சின்றி உறுப்பாடான வேலை செய்வதற்கும், சட்ட சபைகளின் உள்ளும் புறமும் தேசவிமோசனத்திற்கு, ஸ்வராஜ்யத்திற்கு ஒற்றுமையுடன் வேலை செய்வதற்கும் செய்யப்பட்ட கம்பீரமான விண்ணப்பமாய் விளங்குகின்றன.

காங்கிரஸ் மகாசபை தேசத்தாரின் அபிப்பிராயத்தை, பூதக் கண்ணாடி சூரிய கிரணங்களை ஒரே முகமாகச் சேர்ப்பது போல, ஒன்றுபடுத்தித் தீர்மான ரூபமாய் வெளியிடவும், அத் தீர்மானங்களை கிரியாம்சையில் நிறைவேற்றவுமே ஏற்பட்டதாகும். கௌஹாத்தி காங்கிரஸில் சட்டசபை விஷயமாகவும், வெளிநாட்டு இந்தியர் விஷயமாகவும் தேசத்தில் இவ்வாண்டில் செய்ய வேண்டிய நிர்மாண வேலைக்குரிய தீர்மானங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. தேசமக்கள் இவற்றை நிறைவேற்றி வைக்க ஈசன் அருள்வானாக.

புத்த தர்மம்.

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் பாடியது)

தூய்மை யுறுக! தூய்மை யுறுக!
வாய்மன முடலிற் றூய்மை யுறுக!
ஒழுக்கத் தாலே பழுக்குந் தூய்மை!
அழுக்கற வாழ்மின் விழுச்சீ ருலகீர்!
பற்றின் வருவதே பாருடைத் துன்பம்!
அற்றவர்க் கில்லை சுற்றுறுந் துன்பம்!
பொறிக் காட் பட்டே பிறக்கும் பற்றே!
பிறப்பின் வருவது துறக் கொணுத் துன்பம்!
மண்ணுல கத்திற் புண்படு மாந்தர்,
எண்ணில வெண்ணித் திண்மன முடைவர்!
"நாமே யாளுவோம் பூமிக ளெல்லாம்,
காமமோ" டென்றே தாமலைந் துழல்வார்!
வேட்கை மீறவே வாழ்க்கை சோருவர்,
நாட்களைச் சூதிற் ருேற்றலை மாந்தர்!
பிறப்பு மிறப்புந் துறக்கு நெறிக்கே
சிறப்புடை யெண்வழி யுரைக்குனன் கேண்மோ!
துன்பம் பற்றேன் றின்ப வழியை,
நன்கறிந் தொழுகுமின்! அன்பு பேணுமின்!
பொறிக ளடக்குமின்! பொறுமை கொண்மின்!
நறவினு மின்சொல் லுறவுரைத் தைந்து
பெரும்பிழை யற்றே, நறுங்குணம் பெறுமின்!
அறம்பெறு முயற்சி திறம்பிடா திருமின்!
காமம் வெகுளி, கட்கள வின்றி,
நேம வழியில் நிறையுற் றெழுகுமின்!

இப் பாட்டில் புத்தரின் உபதேசங்கள், புத்த தர்மம், தர்மபாலன் முதலியவற்றிற் சொல்லப்பட்டபடி சுருக்கிக்கூறப்பட்டுள. அஷ்டாங்க மார்க்கம், பஞ்சசீலம், துறவிகட்கு தசசீலம், பஞ்சபலன், மைத்ரீபாவம், அசுபபாவம் முதலியன இதனுள் ஆங்காங்கு பொதிந்துள்ளன.

துறவற நெறி.

ஊன் மண மறுவீர்! உறங்குமின் தரையில்!
நானென்ப தறுவீர்! ஆணவம் விடுவீர்!
நாட்டியம் விரகப் பாட்டுகள் விலக்கீர்!
தீட்டெனப் பொன்னைச் சிந்தியா துய்மின்!
தன்னலம் விடுமின்! மன்னுயிர்க் குழைமின்!
தற்புகழ் விடுமின்! தற்கொலை தவிர்மின்!
போக விருப்பைப் போக்குமி னின்னே!
தேக சுத்தியைத் தினந்தினஞ் செய்மின்!
நேய மனமுந் தூய கரணமுந்
தேயா வாழ்விற் றிகழுக வுலகே!

சகோதர வுணர்ச்சி.

அனைத்தும் வாழி! தினைத்துணை நோவும்,
எனைத்து மின்றி, இன்னல் போன்றி,
எய்துக களிப்பே வையக மெல்லாம்,
செய்கை நலனே கைதர வாழி!
ஆமை போன்றே ஐந்தை யடக்குமின்!
தாமே யுரியர் தமக்கே யாமின்!
மின்னுடன் பொய்யா மென்னு மறிவும்,
கன்ம யோகமும் நன்மை பெறுக!
ஒன்றே யுயிர்கள் என்றன் புறுவீர்!
என்றும் எல்லாம் நன்றுற வாழ்க!
தானமுஞ் சீலமுந் தயையுந் தியானமும்,
ஞானமும், வீரமும், நலம்பெறு பொறையும்,
நன்கறிந் தொழுகித் துன்ப மறுமின்!
வன்பணி யாற்றுமின்! வண்மை பூணுமின்!
பெற்றோர் சேய்க்கு நற்கலை நல்குக!
பெற்றோர் பணிகளைப் பிள்ளைகள் புரிக!
ஆசார் தருக தேசுறுங் கலையே!
மாசறு தொண்டேன் மாணவர் பயில்க!
பத்தினி யர்தம் பதிப்பணி புரிக!
உத்தம ராக வொழுகுக கொழுநர்!

சேவகற் கேசமான் செம்மையே செய்க!
பூவினில் நட்பும் பொங்குக அன்பும்!
துறவுந் தவமுந் தூய நெறியும்,
அறமும் ஓங்குக! ஆருயிர் வாழ்க!
யாதும் போகோடு நோகும், ஜாதியும்,
மோகச் சித்தும், முரண்படு மறையும்
ஒழிக! வேற்றுமை அழிக மாயையே!
வழிக அன்பு! வாழுக கருணை!
புத்தன் தருமம் புத்த சங்கமுஞ்
சுத்த நெறியுஞ் சுடருற் றோளிர்க!
சாந்த மனமும் சாதன வாழ்வும்,
ஏந்தும் அறவோர் என்றும் வாழ்க!
புத்தன் வாழ்க! பொலியுக தர்மம்!
புத்த சங்கம் புனிதமாய் வாழ்க!.

செல்வம்.

"மனித சமூகத்தின் நன்மைக்காகவே செல்வம் ஏற்பட்டுள்ளது. அதன் அளவை கஜங்களாக வாவது துலாக்கணக்காக வாவது நிர்ணயிக்க முடியாது; இடைக் கிடை தங்கம் வைத்து நிறுக்கவும் இயலாது: மனித சமூகத்தின் நன்மைக்கு அது விளை விக்கும் பயனை வைத்தே அளக்க இயலும்."

ஆல்பிரட் மார்ஷல்.

பெண்கள் பக்கம்.

அழகு.

அழகு என்னும் பொருளை என்ன விலை கொடுத்தாவது மாதர் விலைக்கு வாங்கிவிட எண்ணுவர். அழகு பெறக்கூடிய ஓர் பொருள்தான். அதற்கு ஒரு விலையும் உண்டு. உலகில் அழகுமிருந்தவர்களைக் கவனிக்கும் பொழுது இரண்டு விஷயங்கள் தெளிவாய்த் தெரிகின்றன. நல்ல ஆரோக்யத்தையும் சந்தோஷத்தையும் பெற்றிருப்பவர்கள்தாம் அழகுடன் விளங்குகிறார்கள். ஆரோக்யம் இல்லாத ஒரு சரீரம் எத்தனை அணிகள் அணிந்தாலும் ஒளியின்றி விகாரமாய்த் தென்படுகின்றது. களிப்பில்லாத ஒரு முகம் வாடிய மலர் போல உணர்வற்றுக் களங்கமடைகின்றது. ஆகவே இயற்கையான அழகைப் பெறவேண்டுமானால் ஆரோக்யமும் களிப்பும் அவசியம் என்று தெரிகின்றது. ஆரோக்யம் என்பது நோயில்லாமல் மட்டும் இருப்பதன்று. ஆனால் எந்த வேலையையும் செய்து முடிக்கும் வன்மையும், இடையில் சோர்வு இன்மையும், வெளிப் பொருள்களின் உதவியின்றியே ஊக்கத்துடன் விளங்குவதும் ஆரோக்யத்தை வெளிக்காட்டுகின்றன.

பல நாடுகளில் பல ஜாதியார்கள் வெவ்வேறு தேக அமைப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குள் அழகுள்ளவர்களென்று வர்ணிக்கப்படும் அனைவரும் ஒரே மாதிரி சிற்றிடையும் மதிமுகமும் பெற்றிருக்கவில்லை. எனினும் அவாகள் அழகுடையவர்களே. அழகு பல நாட்டினருள் பலதிறப்பட எண்ணப்படுகிறது. ஒரு நாட்டுப் பெண்கள் தலையை அதிகமாய் வளர்த்தல் அழகற்றதென்று எண்ணுகின்றனர்; மற்றொரு நாட்டார் நீண்ட கூந்தல் முழுதும் செம்மையும் மஞ்சளும் பொருந்தி செம்பொன்னைப் போல இருக்கவேண்டுமென்று கருதுகின்றனர். நம் நாட்டார் குழல் நீண்டு, அடர்ந்து, கறுத்து மேகத்தைப் போல விளங்கவேண்டுமென்று கொள்ளுகின்றனர். இவ்வாறே பிற உறுப்புக்களைப்பற்றியும் எண்ணற்ற அபிப்பிராய வேற்றுமைகள் பல அறிஞருள்ளும் காணப்படுகின்றன. ஆயினும் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய சில ஒற்றுமைகளும் இருக்கின்றன. அழகுக்கு உற்பத்திஸ்தானம், அடிப்படை

ஆரோக்யம் என்பதும், சரீர வளர்ச்சிக்கு இன்றியமையாத களிப்பான மனநிலை அழகுக்கு மிகவும் பயன்படுவதென்பதும் பலரும் ஒப்புக்கொண்ட பழைய உண்மைகளாவன.

இவற்றைப் பெறுவதற்கு முதலாவதாகப் பெண்மகள் ஆகாரவிஷயத்தில் கவலைகொண்டு கவனிக்கவேண்டும். புலால் முதலியவற்றை விலக்கி சுத்தமான உணவுகளைத் தயார்செய்தல், அவைகள் கெட்டுவிடாமல் பாதுகாத்தல்; மிதமான போஜனம் செய்தல் முதலியவற்றில் பெண்கள் மிகுந்த சிரத்தைகொள்ள வேண்டும். அளவுக்கு மிஞ்சிய உணவாலேயே அனேக வியாதிகள் தோன்றுகின்றன. சரியான உணவைப் பசித்த பொழுது அளவறிந்து புசித்தால் மருந்தென்பதே தேவையில்லாமற்போய் விடும். இந்நாட்டுப் பெண்கள் சாப்பிடும்பொழுது கதைகள் பேசிக்கொண்டு அளவுக்குமிஞ்சி உண்டு தாங்களும் கஷ்டப் படுவதுடன் பலவீனமான சந்ததிகளுக்குக் காரணமாகிறார்கள் என்ற பெரும் வசை தொலையவேண்டும். ஸ்நானம், தேகப்பயிற்சி முதலிய விஷயங்களிலும் பெண்கள் சிரத்தை காட்டவேண்டும்.

இரண்டாவதாக நம் பெண்கள் களிப்புடன் இருக்கப் பழகவேண்டும். சந்தோஷம் ஒரு மனநிலை. சென்றதை நினைத்து வருந்திக்கொண்டேயிருப்பது பெண்களிடம் குடிகொண்ட ஒரு வழக்கமாயிருக்கிறது. எதிலும் துன்பத்தை மறந்து இன்பமடைய எண்ணவேண்டும். கிடைத்த ஒழிவு காலத்தை வருத்தப்படவும், பிறரிடம்சொல்லி அழவும் கழித்து விட்டால் நம் ஜாதி என்றுதான் மேன்மையடையக்கூடும்? உயர்ந்த புத்தகங்களையும், கதைகளையும், சமய நூல்களையும் படித்தல் நலம். கணவர்முன்பு மட்டும் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்பது தவறு. வீட்டு வேலைக்காரியிடமும், உறவினரிடமும் எல்லாக்காலத்திலும் சந்தோஷத்துடன் மலர்ந்த முகத்தோடும் இன்சொல்லோடும் விளங்குவது அழகைத் தானேகாட்டுகின்றது! துக்கப்படுவதும், கோபப்படுவதும் மனச் சாந்தியை அழிப்பதுடன் முகத்தில் பலவிகாரக் குறிகளை யுண்டு பண்ணி ஆரம்பத்தில் அழகைக் குன்றச்செய்துவிடுகின்றன. “அழகுக் கோயில் ஆரோக்யம், ஆனந்தம் ஆகிய பாறைகளின் மேல் கட்டப்படுகிறது.”

லீலா சுகர்.

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதியது.)

ஒவ்வொரு மனித வாழ்விலும் உணர்ச்சிக்காலம் ஒன்றுண்டு. உண்மை வழியைத் தப்பி மயங்கி நிற்கும் மாயைக் காலம் ஒன்றுண்டு. இம் மாயைக்காலங்களில் மனிதன் விலங்காகிறான். ஊண், உறக்கம், ஊடல், கூடல், சிற்றின்பம் முதலியவற்றின் இன்ப துன்பங்களில் அவன் வாழ்வு கழிகின்றது. அவன் உடல் மோக ஆசைப்பெட்டியாக ஆகின்றது. அவனுக்கு உலகம் காமவேள் நடனசாலை யாகின்றது. காமனைப்போலவே கண்ணிழந்து உண்மை வழியினின்று வேறுபட்டு உழலுகின்றான். அப்போது காதலே அவன் வேதமாகிறது. பெண்ணின்பமே அவனுக்கு விண்ணின்பமாகிறது.

"காதல் எனு மெண்ணங் காலத்தா லோங்கியே
வீதல் அடையுமாம் வீண்."

காம வுணர்ச்சி வயதைப்பற்றி வளர்ந்து வயதளவில் வற்றுகின்றது. காமவேள் நடனசாலையினின்று தப்பி, இளமை முதல் புனிதராக வாழும் சில மஹாத்மாக்களும் உளர். ஏகநாதர், அப்பர், மாணிக்கவாசகர் முதலிய பெரியார் இத்தகையார். சிலர் புத்தரைப்போன்று உலகோரின்பத்திற்காக உலக இன்பத்தைத் துறக்கின்றனர். சிலர் எனது அண்ணல் இராமகிருஷ்ணபரமஹம்ஸரைப் போன்று மணந்தும் காமற்ற வாழ்க்கை வாழுகின்றனர். ஆனால் சிலருக்கு இக்காமவேள் நடனசாலையில் ஆடி இளைத்து, தளர்ந்து, உலர்ந்து, விழைந்து, குழைந்து, வெந்து, நொந்து, தங்கள் போக நாடகத்தின் இறுதிக் காட்சியில் உணர்ச்சிவருகின்றது. "திருப்புகழ்" பாடிய பெரும்புகழ் வாய்ந்த அருந்தமிழ்க் கவியான அருணகிரிநாதர் இப்படி உணர்ச்சி அடைந்தவர். தெலுங்கு பாஷையில் சிறந்த அற நூலாகிய "வேமனசதகம்" பாடிய வேமனா என்னுங்கவி இப்படி உணர்ச்சி பெற்றவர். அவ்வுணர்ச்சி இவர்களுடைய சிற்றின்பத்தை மாற்றி இவர்களுக்குப் பேரின்பப் பசியை யுண்டாக்குகிறது. தாஸியின்மோகத்தை ஈசனின் மோகமாக அவர்கள் மாற்றினர்.

மோகத்தை வெறுத்து யோகத்திலாழ்ந்தனர். இத்தகையாரில் நமது காதைத் தலைவரான லீலாசுகரும் ஒருவர். ஆரியமொழியில் "கிருஷ்ணகர்ணாமிருதம்" என்னும் சீரிய கீதங்களை அவர் பாடியுள்ளார்.

இவருடைய வாழ்வின் வரலாறு வங்காளத்தில் நாடகமாக நடிக்கப்படுகிறது. அந்நாடகத்தைக்கண்ட இராமகிருஷ்ணபரமஹம்ஸதேவர் பரவசமானார். நமது தமிழருக்கும் லீலாசுகரின் கதைச் சுவையைப் புகட்டுகிறோம்.

முகம்மதிய அரசர் நாட்களில் மத்திய இந்தியாவில் ஒழுக்கத்தில் விழுப்பமான ஒரு அந்தணக் குடும்பம் இருந்தது. நல்லொழுக்கத்தை உயிரினும் மேலாகப் பேணும் பெற்றோர்களுக்கு நமது லீலாசுகர் ஒரே மைந்தன், செல்வமைந்தன். பெற்றோர்கள் இவனை மிகவும் செல்வமாக வளர்த்தார்கள். நமது லீலாசுகரின் தகப்பனார் ஏராளமான செல்வத்துக்கு அதிபதியாயிருந்தார். ஆனால் கடவுள் அவருக்கு ஆயுட்செல்வம் கொடுக்கவில்லை. தனது ஒரே மைந்தனையும் சிறுவயதிலேயே ஒப்பற்ற செல்வத்துடன் விட்டு விட்டு அவர் விண்ணுலகை யடைந்தார். இச் சிறுபிள்ளை அடக்குவாரின்றி கட்டு மீறி நடக்கத் தொடங்கினான்.

தன் செல்வத்தைக் கண்டபடி செலவழித்தான். தீய நட்பின் நோய்வாய்ப் பட்டான். தன்னுடைய கெட்ட நடத்தையில் பிடிவாதங் கொண்டான். தாய் எவ்வளவு முயன்றும் அவனைத் திருத்த முடியவில்லை. லீலாசுகர் வேட்டைநாய் போன்று காமப் பொருட்களில் மோப்பம் பிடித்துத் திரிந்தான். முடிவில் சிந்தாமணி என்னும் ஒரு வேசைக்கு ஆட்பட்டான் தேனில் விழுந்த ஈ போல, அவள் அழகினால் அகமயங்கி நின்றான். தன் வீட்டுக் காரியங்களை முற்றும் மறந்தான். சிந்தாமணியே சிந்தையானான். காமக்கள்வருடன் காமுற்று நட்டான். காமமென்னும் போதையில் தன் செல்வத்தை யெல்லாம் வீணாக்கினான். தாய் நோவதையும் எண்ணிலன். வேசையின்வலையில்பட்டமனம் வேறெப்படித்தா னிருக்கும்?

தன் தகப்பன் திதி வந்தது. அன்றும் தாஸியின் மோகம் லீலாசுகரைப் பின்தொடர்ந்தது. இரண்டிற்கும் நடுவே அவன்

மனம் ஊசலாடியது. எப்படியோ மனதைத் திருத்திக்கொண்டு கருத்தைச் சிந்தாமணியின் மேலும் கையை எள்ளு நீரின் மேலும் வைத்து, தன் தகப்பனார் காரியத்தை முடித்தான். அன்றுதான் அவன் வீட்டில் சிறிது நேரம் அமர சந்தர்ப்பம் ஏற்பட்டது. அச்சமயம் பார்த்து அவனுடைய தாயார் புத்தி மதி சொல்ல லானாள்.

"என் மைந்த, நீ வீட்டில் தங்காது வீணாகத் திரிவது பெரும் பிழையே யாகும். பொது மகளின் பொய்மை மயக்கத்தால் மனவலிகுன்றியது, உடல் நுடங்கியது. உன்தகப்பனார் சேமித்த செல்வமெல்லாம் தீர்ந்து போயிற்று. நாம் ஏழையானோம். நங்குலத்திற்கும் இழிவுற்றது. இனியாகிலும் வேசை வழிநில்லாமல் வீட்டில் நிலைப்பாயாக"

இவ்வன்னை மொழிகள் நமது லீலாசுகரை சில நாட்கள் வீட்டில் இருத்தின. ஆனால் அவர் மனம் மட்டும் சிந்தாமணி யிடமே குடிகொண்டது. அவளைக்காணாது பைத்தியம் பிடித்தவன் போலானான். அவனுக்கு வீட்டில் இருப்புக் கொள்ள வில்லை.

ஒரு நள்ளிரவில் திடீரென்று வீட்டைவிட்டுக் கிளம்பினான். சிந்தாமணியின் காதலே அவ் விருட்டிலும் ஒளி காட்டி அவன் மனக்கண்ணை இழுத்துச் சென்றது. காற்று சுழன்று சுழன்று அடித்தது. புயல் மழை பெய்தது. சிந்தாமணியின் நினைப்பில் இவற்றையெல்லாம் மறந்து மென்மேலுஞ் சென்றான். இவ்வளவு ஆத்திரத்துடன் சென்றும் சிந்தாமணிக்கும் அவனுக்கும் நடுவே ஒரு அகன்ற ஆற்றின் வெள்ளம் தடுத்து நின்றது. காம வெள்ளத்தினால் கரைபுரண்டோடும் லீலாசுகரின் மனம் கலங்கி நிலைகுலைந்து நின்றது. "அந்தோ! என் காதலியைக் காணக் கொடுத்து வைப்பேனோ! ஏ சிந்தாமணி! என் உயிர் நிலை உன்னிட மிருக்கின்றது. இந்த ஆறு நம்மைப் பிரித்ததே! நம்மீது அதற்கு எவ்வளவு பொறாமை!" என்று புலம்பி ஆற்றின் கரையோரமாகவே சென்று ஆற்றைக் கடக்கும் வழியை நோக்கித் திரிந்தான். ஒரு மயானத்தண்டையில் வந்தான். அங்கு பிணங்கள் எரிந்து கொண்டிருந்தன. இந்தப் பயங்கரமான காட்சியினூடே ஒரு இனிய கானம் கேட்டது. அந்தப் பாட்டில் சிந்தா

மணியின் பெயரும் அடிக்கடி வந்தது. நமது லீலாசுகரின் காதுகளில் சிந்தாமணியின் காதல் போன்று அப்பாட்டு பாய்ந்தது. அப்பாட்டு லீலாசுகரை மகிழ்வித்தது. இப்பாட்டைப் பாடின தெய்வப்பெண் "பகலினி" என்பவள். அவள் பக்தி ததும்பும் பாட்டுக்களோடு சிந்தாமணியின் பெயரையும் இணைத்துப்பாடினள். அதைக்கேட்டதும் லீலாசுகருடைய காமக்காடு தீப்பிடித்து எரிந்தது. வெள்ளத்தை மதிக்கவில்லை. தன் உயிரைத் துரும்பென்று எண்ணினன். சிந்தாமணியின் காதலையே உயிரினும் சிறந்ததென விரும்பினன். வெள்ளத்தில் குதித்தான். ஒரு பிணம் மிதந்து வந்தது. அதை மிதப்புக்கட்டையென்று நினைத்துப் பற்றிக்கொண்டு எதிர்த்த கரையை யடைந்தான். உடனே கண் தெரியாத களிப்புடன் சிந்தாமணியின் மனைக்கு ஓடினன். உள்ளே நுழைந்தான். அவள் புன்சிரிப்பைப் பருகினன். சிந்தாமணி வியந்தாள்.

சிந்தாமணி:- என்காதலனே, மழையிலும் புயலிலும், காற்றிலும், இருட்டிலும் தாங்கள் வருந்தி என்னிடம் வந்தது என்ன வியப்பு!

லீலாசுகர்:- என் கண்ணே, இவையெல்லாம் உன்னைக் கண்ட இன்பத்தில் மறைந்துவிட்டன. உன்புன்னகையொளியும், இன் சொல்லின் நயமும், உன் இனிய பாட்டின் சுவையும் பரிசாகப்பெறுவதற்கு நான் நரகவேதனையை வேண்டுமென்றாலும் சகிக்கத் தயாரா யிருக்கிறேன்.

சிந்தாமணி:- என் காதல! கரை புரண்டோடும் ஆற்று வெள்ளத்தையும் எப்படிக் கடந்தீர்கள்?

லீலாசுகர்:- என் கண்மணி, உனது காதல் வெள்ளம் என் மனதில் கரை புரண் டோடுகின்றது. அதில் ஓர் கட்டையைப் போல மிதந்து வந்து உனது இன்பக்கடலில் ஆட வந்து சேர்ந்தேன்.

சிந்தாமணி:- எனது அன்புள்ள காதல! நான் ஒரு சிறு மொழி கூறுகிறேன். அதைத் தாங்கள் மனத்திற் கொள்ள வேண்டும். என் பொருட்டு இருட்டையும் மழையையும், வெள்ளத்தையும் பொருட் படுத்தாது, உள்ளக் காதல் தூண்ட இங்கு வந்தீர்கள். இதனல் தாங்கள் அடைந்ததென்ன? (தொடரும்)

நீதியின் நிலையம்.

பரதன்.

(திருவாளர். ஆர். பி. சேதுப்பிள்ளை, பி. ஏ. பி. எல். எழுதுவது)

அயோத்திமா நகரில் அரசு புரிந்த தசரத மன்னன் நெடுங்காலம் மகப்பேறின்றி வருந்தினான். அறிவறிந்த மக்களைப் பெறுமாறு அருந்தவங்கள் இயற்றினான். அவற்றின் பயனாக நான்கு நன் மக்களைப் பெற்றான். அந்நால்வரில் தலை மகனான இராமன் கோசலையின் திருமகனாகவும் பரதன் கைகேயின் மைந்தனாகவும் அமைந்தார்கள். இளந்தேவியின் மணி வயிற்றில் இலக்குவனும் சத்துருக்கனும் தோன்றினார்கள். இம் மைந்தர் நால்வரும் அயோத்திமன்னனது அரண்மனையில் வளர் பிறைபோன்று வளர்ந்து வந்தார்கள்.

கோசலையின் மைந்தனான இராமன் தன் சிற்றன்னையாகிய கைகேயியிடம் வளர்வானாயினான். அவ்வாறே பரதன் முதற்றேவியாகிய கோசலையிடம் வளர்ந்து வந்தான். இவ்வாறு மைந்தர் இருவரும் மாறி வளர்ந்த தன்மையை கைகேயி மனமாரப் புகழ்ந்து கூறுகின்றாள். மதி நலம் வாய்ந்த மந்தரை அத்தேவியை நோக்கி, "அன்னையே! நீ ஒன்று மறியாது உறங்குகின்றாயே! உன்னைப்பற்றி விழுங்கும் பெருங்கோள் நெருங்கி வருகின்றதே" என்று பய மொழிகள் வழங்கினாள். அப்போது தேவி சிறிதும் மனங் கலங்காது மந்தரையை நோக்கி, "இவ்வுலகுக் கெல்லாம் வேதம்போல் விளக்குகின்ற இராமனைப் பயந்த எனக்கு இடரும் உண்டோ?" என்று தானே இராமனைப் பெற்றெடுத்ததாயாகக்கூறுவது அறிந்து போற்றுதற்குரியதாகும். பின்னும் மந்தரை அமைவுறாமல், "ஐயோ! நின் நலமெல்லாம் வீழ்ந்தது. கோசலை வாழ்ந்தனள்." என்று தேவியின் உள்ளத்தில் அழுக்காற்றை எழுப்புமாறு அழுத்தமாகக் கூறினாள். அப்பொழுது, "ஆகா! கோசலை வாழ்ந்தாள் என்பதில் ஐயமொன்றுண்டோ? மன்னாதி மன்னனான தசரதன் அவள் கணவன். 'பன்னரும் பெரும் புகழ்ப் பரதன்' அவள் மைந்தன். இத்தகைய பேறு பெற்ற கோசலையின் வாழ்

விற்கு என்ன குறை" யென்று இயற்கை நலம்வாய்ந்த கைகேயி இனிதாக எடுத்துரைத்தாள்.

தாயாரிருவரும் இவ்வாறு கருதியது போலவே இருமைந்தரும் தம் காதலன்னையரிடம் அளவிறந்த அன்பு கொண்டு விளங்கினர்கள். மிதிலைமா நகரில் மணக் கோலத்தோடு தாயார் மூவரையும் வழிபடப் போந்த தலைமகன் முதலில் தன் காதலன்னையாகிய கைகேயியை வணங்கி, அப்பால் கோசாலா தேவியை வணங்கினன் என்று கதை கூறுகின்றது. அவ்வாறே பதினலாண்டு கானகத்தில் படரெல்லாம் பட்டு அயோத்தி நகரத்திற்குத் திரும்பி வந்த இராமன் தாயார் மூவரையும் கண்டபோது கைகேயியின்பாதம்பணிந்த பின்னரே கோசலாதேவியை வணங்கினன் என்றறியப்படுகிறது. இன்னும் தனது காதலன்னையைக் கண்டபோது இராமன் அவள் அடிபணிந்து அடங்கி நின்று ஒருகையால் தன் ஆடையைமடக்கி மற்றொருகையால் வாய்புதைத்து மனங் குழைந்து நின்ற தன்மையை,

> "வந்தவள் தன்னை சென்னி மண்ணுற வணங்கி வாய்த்த
> சிந்துறப் பவளச் செவ்வாய் செங்கையிற் புதைத்து, மற்றை
> சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றான்
> அந்திவந் தடைந்த தாயைக் கண்ட ஆன் கன்றின் அன்னான்."

என்று கம்பர் பெருமான் கனிந்த சொற்களால் எடுத்துரைக்கின்றார். இன்னும் தன் உயிரினும் அருமையாய்க் காதலித்து வளர்த்த ஓர் கிளியினுக்கு எப்பெயரிடலாமென்று சீதை இராமனிடம் கேட்ட போது அப் பெருமான் தன் காதலன்னையாகிய கைகேயியின் பெயரையே அக் கிளிக்கு அமைக்குமாறு ஆணை செய்தாரென்றால் அவரது அன்பின் திறம் இனிதறியப் படுமன்றோ.?

இவ்வாறு தன்னைப்பெற்ற அன்னையினும் வளர்த்த அன்னையிடம் பேரன்பு பூண்டு விளங்கிய இராமன் கோசலையின் காதல் மைந்தன் பரதனே யென்றும் பாராட்டிக் கூறுகின்றான். தனக்குரிய அரசாங்கத்தை தம்பிக்கு அளித்துக் கானகம் செல்லக் கருதிய கமலக் கண்ணன் கோசலையை நோக்கி இருகரங்களையும் குவித்து, "அன்னையே! நின் காதல் திருமகனான பரதனே

இனி அரசாளப் போகின்றான்" என்று அத்தேவிக்கு ஆறுதல் கூறினான். தான் பெற்ற மைந்தனான இராமன் அரசிழந்த துயரத்தால் நலிந்த கோசலையின் உள்ளம் காதல் மைந்தனான பரதன் பெற்ற பெருமையை அறிந்தபோது ஒருவாறு ஆறுதல் அடையுமென்று கருதியே அப்பெருமான் அவ்வாறு கூறினான்.

மன்னவன் மைந்தரில் இலக்குவன் இராமனோடும் சத்துருக்கன் பரதனோடும் இணை பிரியாது வாழ்ந்து வந்தார்கள். பரதனும் இராமனும் குணத்தாலும் நிறத்தாலும் ஒன்று பட்டு விளங்கினார்கள். தசரத மைந்தரது தன்மையை தனித்தனியாக மிதிலை மன்னனிடம் உரைக்கப் போந்த முனிவர்,

"எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த
வள்ளலையே அனையானைக் கேகயர் கோன் மகள் பயந்தாள்"

என்று மொழிந்தான். அயோத்தி நகரத்திலிருந்த பரதன் நிறத்தாலும் குணத்தாலும் இராமனையே நிகர்ப்பானென்று முனிவர் நயமாக அறிவித்தார். இன்னும் இராமனைத் தேடுமாறு சேனையுடன் கானகம் நோக்கிச்சென்ற பரதனை கங்கையாற்றின் கரையில் குகனென்னும் வேடர் வேந்தன் பரதனது தோற்றம் இராமனது தோற்றம்போலவே இலங்கக்கண்டு, "நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்" என்று வாயாரப் புகழ்ந்து மகிழ்ந்தான்.

மிதிலைமாநகரில் தசரத மக்கள் நால்வருக்கும் திருமணம் நிகழ்ந்தபின்னர் யாவரும் அயோத்தி நகருக்குத் திரும்பிவந்தார்கள். பரதனும் சத்துருக்கனும் கேகயநாட்டரசனிடம் விருந்தினராகச் சென்றார்கள். அப்போது அயோத்திமன்னன் அரசாங்கபாரத்தை தலைமகனான இராமனிடம் ஒப்புவித்துத் தவநெறியை மேற்கொள்ள விரும்பினான். அக்கருத்தை அமைச்சர் முதலிய அறிஞரிடம் அறிவித்து ஓர் நன்னாளில் இராமனுக்கு முடிசூட்ட நிச்சயித்தான். நகரமெங்கும் மங்கல முழக்கம் நிரம்பியது. ஆடவரும் பெண்களும் அகமகிழ்ந்தார்கள். இராமன் திருமுடி சூடும் பெருமையை அறிந்த தாயார் மூவரும் மாசிலா மகிழ்ச்சியுற்றார்கள். அந்நிலையில் சூழ்ச்சியில் வல்ல மந்தரையென்னும் மாது கைகேயியின் மாளிகைசென்று அவள் மனத்தினை மாற்றி மன்னவன் முன்னர் வாக்களித்திருந்த வரங்

கள் இரண்டையும் வேண்டுமாறு தூண்டினள். அதற்கிசைந்த கைகேயி அரசனை நோக்கி ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆளவேண்டுமென்றும், தலைமகனான இராமன் தவக்கோலம் கொண்டு பதினாலாண்டு கானகத்தில் வாழவேண்டு மென்றும் கடுமையாய் வேண்டினாள். அப்போது மன்னன் இடியோசை கேட்ட மயில்போல் ஏங்கி மயங்கினான். அவ்வரங்கள் கூறிய வேல்போல் அவன் மெய்யில் பாய்ந்தன. மெய்மை தவறா மன்னவன் முன்னர் வாக்களித்த வரங்களை மறுக்க ஒரு சிறிதும் இசைந்தானல்லன். ஆயினும் இராமன் சடைமுடியும் மரவுரி யுந் தரித்து கானகம் செல்லவேண்டுமென்ற கடுஞ்சொல் அவன் இதயத்தை இரண்டாகப் பிளந்தது. ஆசையால் அறிவிழந்த அரசியை நோக்கி உன் மகனான பரதன் எவ்வாற்றானும் இவ்வரசை ஏற்றுக்கொள்ளானென்று எடுத்துரைத்தான். அவ்வுரையைக்கேட்டும் சிறிதும் மனம்தளராது கல்மனம் படைத்திருந்த கைகேயியைக்கண்ட காவலன், "இந்நாடுநகரங்களை யெல்லாம் நின் மகனே அரசாளக்கடவன்; இவ்வுலகுக்கெல்லாம் உயிர் போன்ற இராமன் கானகம் செல்லவேண்டுமென்னும் கருத்தை மட்டும் தவிர்ப்பாயாக" என்று நயந்துவேண்டினான். அதற்கும் இரங்காது பெண்ணினுக்குரிய பெருந்தன்மை சிறிதும் அற்றிருந்த கைகேயியைக்கண்ட மன்னவன் மனம் கொதித்து,

'இன்னே பலவும் பகர்வான் இரங்காதாளை நோக்கி
சொன்னே னின்றே இவள்என் தாரமல்லள் துறந்தேன்
மன்னே யாவானிவரும் அப்பரதன் தனையும் மகனென்று
உன்னேன் முனிவா அவன்ஆகான் உரிமைக்கென்றான்"

கல்மனம் படைத்த கைகேயியைத் தாரமல்லள் என்று தசரதன் துறந்தான். அவள் வயிற்றிற் பிறந்த பாவத்திற்காக பரதனையும் மகனல்லவென்று மன்னவன் துறந்தான். அப்பால் அவள்வேண்டிய இரு வரங்களையும் ஈந்து அரசன் ஆவிசோர்ந்தான். அன்னையின் ஆணையைத் தலைமேற்கொண்ட இராமன் அகமும் முகமும் மலர்ந்து கடுங்கானகம் சென்றான். அவனோடு இணைபிரியா இயல்வாய்ந்த தம்பியும் சீதையும் அயோத்தி நகரினின்றும் அகன்றார்கள். (தொடரும்.)

மகாத்மாகாந்தியின் மணிமொழிகள்

திருவாளர், பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்.
மொழி பெயர்த்தது.

௩௭. சமயோசித நடை அறவொழுக்கத்திற்கு முரண் பட்டது. (அதன்படி ஹிம்சையை உபயோகிப்பது குற்றமாகாது.)

௩௮. சமய உணர்ச்சியில் எழுந்த நடைமுறை மூலாதாரமான விஷயங்களில் சமாதானம் அல்லது தந்திரம் எதற்கும் இடங்கொடாது.

௩௯. சுத்தமான சமயமே சமயோசிதமான உபாயங்களில் தலை சிறந்ததாகும். பல விஷயங்கள் சட்டப்படி நியாயமாயிருந்தாலும் அவை யெல்லாம் சமயோசித மாகா.

௪௰. அற நெறியை அலட்சியஞ் செய்யும் செல்வ விருத்தி முறை உயிருள்ளவைபோல் தோன்றினும் உண்மையில் உயிரற்ற அரக்கு உருவங்களை யொக்கும்.

௪௧. அற நெறி பிறழ்ந்த செல்வ விருத்தி முறை அநேக சோதனையான முக்கிய சந்தர்ப்பங்களில் அனுஷ்டிக்க முடிவதில்லை. அம் முறையை வாழ்க்கை முறையாகக் கையாளும் மனிதனும், மனித சமூகமும் இறந்துபடும்.

௪௨. ஒரு மனிதனுடைய அல்லது ஒரு மனித சமூகத்தினுடைய ஆன்ம சுகத்தைக் கெடுக்கும் செல்வ விருத்தி முறை அநீதியானது, ஆகையால் பாபகர மானதாகும்.

௪௩. செல்வ விருத்தி முறைகளை அறிந்து கொள்வதற்கு தற்காலம் கற்கப் பெறும் நூல்களைவிட சமய சாஸ்திரங்களை சிறந்தவை, கேடு விளையாதவை.

௪௪. 'பணமுடையவன் பரம ராஜ்யத்தில் புகுவதைவிட

ஒட்டகம் ஊசித்துவாரத்தில் நுழைவது வெகு எளிது.' இது மனித வாழ்க்கையின் நித்தியமான நீதி நெறியாகும்.

௪௫. கடவுளுக்கும் பொருளுக்கும் ஒருங்கே ஊழியஞ் செய்ய முடியாது என்பது செல்வ விருத்தி உண்மைகளில் தலை சிறந்ததாகும்.

௪௬. இந்தியா ஏழையானாலும் சுதந்திரம் அடைய முடியும். ஆனால் அதர்ம வழியில் ஆக்கம் தேடினால் சுதந்திரம் அடையமுடியாது.

௪௭ இந்து சமயம் தலை சிறந்த அளவில் தன்னடக்கத்தைப் போதித்து வருகிறது. அது ஆன்ம சுதந்திரத்திற்காக ஆக்கை யின்பத் துறவை அறிவுறுத்தும் சமயமே யாகும் என்பதற்கு ஐயமில்லை.

௪௮ யோசிக்கச் சோம்பல் இல்லாதவன் ஸாதுக்கள் உலகத்தைத துறக்க வேண்டும் என்று நினைப்பான். சகல சமயங்களின் நோக்கமும் புருஷார்த்தத்தை வளர்ப்பதே. புருஷார்த்த வளர்ச்சி ஸாதுவாக முயல்வதேயாகும். ஸாது எனினும் குலமகன் எனினும் பொருள் ஒன்றே.

௪௯. இந்துசமயம் என்பது ஜீவஹிம்சை செய்யாமையே. மனித வாழ்க்கையின் வழிகாட்டி யென சகல சமயங்களும் போதிக்கும் தத்துவமும் அதுவே யாகும் என்பது என் நம்பிக்கை.

௫0 இந்து சமயம் 'உரிமை' யன்றிக் 'கடமை' யே யாகும் என்று மாக்ஸ்மூல்லர் கூறியிருக்கின்றனர்.

௫௧. மனிதர் ஏற்படுத்திய மற்ற ஸ்தாபனங்களில் போலவே இந்து சமயத்திலும் குற்றங்குறைகள் உண்டு. ஆனால் அவைகள் சீர் திருத்தஞ் செய்வதற்குக் காரணமாகுமே யன்றி, யாரும் அதை விட்டுப் பிரிந்து போவதற்குக் காரணமாகா.

நீதித் திரட்டு.

50. உலகத்தில் மிகவும் கடைப்பட்ட பொருள் வேலை செய்யாத கை; மிக சிரேஷ்டமானது தொழிலாளர் நெற்றி வியர்வை. 51. அறிவில்லாமல் வாழ்ந்தாலும் அன்பில்லாமல் வாழமுடியாது. 52. இந்த உலகத்தில் நாமிருப்பது உறங்கவும் கனவு காணவும் அல்ல— ஆனால் வேலை செய்யவே. 53. மௌனமா யிருப்பது மிகச் சிறந்தது; அதனாலே நமக்கு யோசிக்க அவகாசம் கிடைக்கும். 54. புகழும் பெருமையும் தாக்கப்பட்டால் அழிந்துவிடுவன; நல்லொழுக்கம் அழியாதது. 55. பிறர்க்கென வாழ்வதே சுதந்திர மார்க்கம். 56. பிறர்க்கென வாழ்பவனுக்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் நண்பர்கள் உண்டு. 57. தனக்கென வாழ்பவனை உலகம் துறந்து விட்டால் அது அவன் குற்றமேயாகும். 58. ஆத்மாவின் வளர்ச்சி தடைப்பட்ட பொழுது நாம் பட்டு விடுவோம். 59. வாசிக்கத் தக்க புஸ்தகம் வாங்கவும் தக்கதே. 60. காரியத்தில் கண்ணாயிருப்பவனிடம் பொறுமை நிகழ்தல் அறிது. 61. உண்மையாய் வாழ்பவனே உண்மையை அறிவான். 62. ஆசைகள் வாழ்வாகிய கப்பலை ஓட்டிச் செல்லும் காற்றாகும்; அறிவு அதை நடத்தும் சுக்கான் பிடிப்பவனாகும். 63. அறத்தின் பெயர் சுதந்திரம்; மறத்தின் பெயர் அடிமைத்தனம். 64. சத்தியம் தானே ஜயம் பெறும்; அபிப்பிராயம் அயல் உதவி நாடும். 65. வறுமை அறியாதவனிலும் துர்பாக்கியன் இலன்; அவன் நல்லவனோ கெட்டவனோ என்று சோதிக்கப் படாதவனே. 66. உரிமையும் கடமையும் ஒருங்கே யிருப்பன; உரிமையுடையவனுக்கு கடமையும் உண்டு. 67. தியாகம் ஒன்று தான் பகைவரை நண்பராக்க வல்லது. 68. உலகமெல்லாம் இல்லையென்று மறுப்பினும் கடவுள் ஒருவர் இருக்கிறார். 69. சுதந்திரம் ஒவ்வொரு மனிதனுடைய பிறப்புரிமையாகும். 70. கஷ்டங்கள் வருவது உத்ஸாகமூட்டுவதற்காகவே; தடை செய்யவல்ல. 71. காரணமின்றி எவனிடமும் அவநம்பிக்கை கொள்ளாதே. 72. ஆத்திரமின்றியும் அயர்வின்றியும் வேலைசெய்.

தென்னிந்தியச் சிற்பம்.

திருவாளர்,

(தொ. மு. பாஸ்கரத் தொண்டைமன் பி. எ. எழுதியது)

அமிழ்தினுமினிய தமிழ் மலி நிலத்து அன்பர்காள்!

எந் நாட்டினும் நன்னாடாகிய இந்நாடு பூர்வம் ஆத்மக்கியானம், பக்தி பரவசம், நல்லூக்கம், பெரு முயற்சி முதலியன மலிந்தும் கற்று வல்ல புலவர்களால் என்றும் நாகரீக பீட மென்று புகழ்தற் குரியதாய்த் திகழ்ந்தது. பரத கண்ட மாகிய இவ் விந்தியா தேயமானது பல்லூழி யாண்டும் பல் வளமும் பல்அரசருமுடையதாய் விளங்கிய தென்பது பிரசித்தம். பரத கண்ட முற் பிதாவாகிய பரத னென்ன! தன்னுயிர்போல மன்னுயிர் ஓம்பும் சிபி யென்ன! பொய் சொல்லா மெய்யனாகி புகழுடம்பு பெற்ற அரிச்சந்திர னென்ன! வில் வலிமையும் தோள் வலிமையுங் கொண்ட இராம னென்ன! பண்டு பாரதப்போர் முடித்துப் பாரெல்லாம் கீர்த்தியுற்ற பாண்டவரென்ன! பிடித்த நோக்கமே பெருமையாய்க் கொண்ட பிரகலாத னென்ன! ஆன்ம விருத்தியின் அக்கரை கண்ட ஆயர் கோனாகிய கிருஷ்ண னென்ன! மகன் மாட்டும் மறுதலியா மனு நீதி தவறாத மனு நெறிச் சோழ னென்ன! பகைவர் தன்னாட்டுள் பதம் வைக்கா தோட்டிய பாண்டிய னென்ன! செயற்கை யழகும் இயற்கை யழகும் செவ்வனே பொழியும் திறல் வேந்தாகிய சேர னென்ன! இம் மட்டோ, பல குறு நில மன்னரும் பல குறிஞ்சி வேந்தரும் பன்னாடெங்கும் பல்கிப் பரவி மன்பதை கோடி மகிழுற வாண்டு இனிதே யிருந்தனர். பிறதேயத்தி னரெல்லாம் இது "பொன் விளையும் போக பூமி" (El Dorado) என்றே கருதி யிருந்தனர். இந் நாட்டில் இயற்கையாய் அமைந்துள்ள நீர்வளம், நிலவளம், மலைவளம் வேறெந்நாட்டினும் கிடையா. ஓர் கால் உன்னத நாகரீக நிலையின் மகா பீடத்தையும், மனோ தத்துவ நிலையின் மகோன்னத கிரீடத்தையும் தரித்திருந்தவர் பாரதமக்கள் என்று கூறுவது ஒரு சிறிதும் மிகையாகாது.

இவ்விதம் மண்ணுலகில் மனித வர்க்கம் தலை கொண்ட நாள் முதல், நம் மிந்திய மக்களே முன்னணியில் நின்றார்கள் என்பது வெளிப்படை. "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது போன்று நம்மை நாமே பெருமை பாராட்டிக் கொள்வதல்ல? தற் காலத்தில் அதி உன்னத நாகரீக நாடெனத் தாங்களே கருதிக் கொள்ளும் மேல் நாட்டாரும் கூட இதனை ஒப்புக் கொள்கின்றனர். மேல் நாட்டாருள் மிகுந்த கல்வியாளர்கள் நம் மிந்தியாவின் புராதன சாஸ்திரங்களிலும் ஞான நிர்மா

ணங்களிலும் கைத் தொழில் விஷேடங்களிலும் மிகுந்த பற்றுள்ளவர்களாய் அவைகளைச் செவ்வனே ஆராய்ந்து பூர்வ காலங்களில் இந்திய நாடொன்றே பலதுறைகளிலும் மேம்பாடுற்று இருந்ததென்று கருதுகின்றனர். இவ்விதம் மேம்பாடுற்று விளங்கும் பல துறைகளில், சிறந்த துறையாகிய சிற்பத்தின் நுட்ப மறியவே இக் கட்டுரை எழுந்ததாகும்.

இந்தியச் சிற்பத்தின் திறனை விரித்தாற் பெருகுமென அஞ்சி சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் தன்மையில் தென்னிந்தியச் சிற்பத்தை ஓர் சிறிதாராய்வாம். தென்னிந்தியச் சிற்பமாவது நான்கு வகைப்படும்: அவை:- கற்சிற்பம், உலோகச் சிற்பம், மரச் சிற்பம், பலகைச் சிற்பம் முதலியனவாம். இச்சிற்பத்தின் திறனையெல்லாம் தன்னகத் தடக்கி விளங்குவது தென்னாட்டுக் கோயில்களேயாம். பூர்வம் சிற்பமானது ஜனங்களின் பொது நிர்மாணமாகக் கருதப்பட்டது. கோயில் குளங்களும், கோட்டை கொத்தளங்களும், மாடமாளிகைகளும் பொதுஜனங்களின் பாதுகாப்பிற்கும், வழிபாட்டிற்கும் சாதகமாய் அப்போதுள்ள அரசர் பெருமக்களாலும், அறிவுடைப் பெரியோராலும் பெரிதும் போற்றப்பட்டு வந்தன. இங்ஙனம் ஜன நிர்மாணம் பொதுஜன முற்போக்கைப் பெரிதும் தழுவி ஒழுங்குபெறப் பாதுகாக்கப்பட்டது. இவைகளுக்கெல்லாம் இயற்கையே பெருந்துணைவனாய் நின்றது என்பது இந்தியச் சிற்பத்துள் விசேட வேலைப்பாடுடைய பல்பெரும் முயற்சிகளால் புலனாம். இத்தகைய பெருமுயற்சிகள், மேல்நாட்டாரது சிற்பமுறைக்கு ஒரு சிறிதும் தாழ்ந்தனவல்ல என்று குறிப்பது மிகையே யாகும்.

இந்நில உலகில், எல்லாம் வல்ல பரம் பொருள் ஒன்று உண்டென்பதும் அவனது பெருங் கருணைத் திறத்தினாலேயே, உலகம் தோன்றி, நின்று இயங்கும் தன்மை பெற்றிருக்கின்றதென்பதும், அவனன்றி யோரணுவும் அசையாதென்பதும் எவரும் மறுக்க முடியாஉண்மை. அத்தகைய பரம் பொருள், ஒவ்வொரு மனிதனின் மனக் கண்ணுள்ளும் ஒவ்வொரு விதமாய்த்தோன்றும் தன்மையது. சிற்பிகளெல்லோரும் உலக சமுதாயத்தின் மனப் போக்கைப் பின் பற்றி நடக்கப்பட்டவர்களே யாதலால், நம் பூர்வ சிற்பிகள், அத்தகைய பரம் பொருளை பல ரூபங்களாய் நிர்மாணித்து ஜனங்களின் மனப் போக்கின் சாதகமாயே செய்திருக்கிறார்கள். அதோடு அவர்கள் இயற்கையில் கண் கூடாகக் கண்டனவெல்லாம் தெய்வ அம்சமாகவே நிர்மாணித்ததை நோக்கும் போது, ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில், அர்ச்சுனனைப் பார்த்து, "நண்ப! என்னை ஆராதிப்பவர்கள் எந்த ரூபமாய் நினைத்து ஆராதிப்பார்களோ அந்த ரூபமாய் அவர்களுக்கு நான் பிரசன்ன மாகின்றேன்." என்று சொன்னதும், "உண்மைப் பொருளாகிய யான் காணும் பொருள்களி

லெல்லாம் அதனதன் தன்மையில் நிற்கிறேன்" என்று சொன்னதும் ஒப்ப நேருகின்றது. இதினின்றும் சிற்பிகளின் மனப் போக்கும் ஜன சமூக மனப் போக்கே யாகும் என்பது தெள்ளிதிற் புலனும்.

இனி தென்னிந்தியச் சிற்ப மானது, பூர்வ தென்னிந்திய குடிகள் வழிபாடு செய்து வந்த கோவில்களிலும் அரசமாளிகைகளிலும் அதனை யடுத்த மற்றும் இடங்களிலும் பெரிதும் விளங்குகின்றது. தென்னுட்டு க்ஷேத்திரங்களும் அவற்றிலுள்ள கோவில்களும் பல. அவற்றில் நம் நோக்கத்தைக் கவர்வன சில. அவையாவன—மகாபலிபுரம், காஞ்சி, திருவாரூர், தஞ்சாவூர், சிதம்பரம், ஸ்ரீரங்கம், மதுரை, ராமேஸ்வரம், திருநெல்வேலி முதலியவையேயாம். இக்க்ஷேத்திரங்களிலுள்ள கோயில் நிர்மாணங்களுள், கோபுரம், ஸ்தூபி, ஸ்தம்பம், உற்சவ விக்கிரகங்கள் முதலியன பெரிதும் சிற்ப சாஸ்திர அமைப்புக்கு அங்கமாகச் செய்யப் பட்டிருக்கின்றன வென்று சிற்ப நூல் வல்லார் கூறு கின்றனர்.

மாகாபலிபுரத்திலுள்ள எழு ரதங்களும் தென்னிந்தியச் சிற்பத்தின் திறனையும், அந் நகரை ராஜதானியாகக்கொண்ட அரசர் பெருமக்களின் ஆற்றலையும் ஒருங்கே விளக்கு கின்றன. அங்குள்ள கற் சிற்பம் நாம் என்றும் போற்றும் தன்மை வாய்ந்தது. இது பற்றி யன்றோ, மேல் நாட்டுச் சித்திரீகரும், இந்தியாவில் பிரயாணம் செய்ய நேர்ந்த காலத்து, மகாபலிபுரத்தைப் பாராது திரும்புவதே யில்லை. அவ்விதம் மேல் நாட்டார் கண்காணித்து, "மகாபலிபுரத்து எழு கோவில்கள்" என்று புத்தகம் வெளியிட்டாலொழிய நமக்கு நம் நாட்டுச் சிற்பத்திறனை யறியமுடிய வில்லை! அந்தோ! இது வென்ன விந்தை! நம் நாட்டுச் சிறபச் சிற்பை யறிய மேல் நாட்டு நிபுணர்களின் உதவி ஏனே! இதுவும் காலக் கொடுமையே! நிற்க.

காஞ்சிபுரத்திலுள்ள கோயில் நிர்மாணம் முழுதும் தென் தேயச் சிற்பிகளின் திறத்தை ஒருங்கே காட்டு கின்றது. அங்குள்ள மண்டபங்களில் பூர்வ மதாசார புராணங்களுக்கு காரணமாய் பல வேதுக்கள் காணலாம். அதோடு, சோழ அரசரின் சரித்திரங்களும், கல் வெட்டுக்களில் செதுக்கப் பட்டிருக்கிறன. அங்கிருந்தே பல வகுப்பினர் தென் தேசங்களுக்கு வந்ததாகவும் காஞ்சியே தென்னுட்டின் தலைநகராகவும் இருந்ததற்குப் போதுமான அனுமானங்கள் அங்கே கிடைக்கின்றன. காஞ்சி காமாட்சி கோவிலில், விக்கிரகத்துக்குப் பதிலாய் விக்கிரகம் நிறுத்தப்படும் பீடம் ஒன்றுதானிருக்கிறது. அதை காம பீட மென்று சொல்லுகிறார்கள். சில ஆராய்ச்சியாளர் அப்பீடத்தின் மேல் முன்னர் பொன்னால் செய்த காமாட்சியின் விக்கிரக மொன்று இருந்ததாகவும்

வடநாட்டில் மகம்மதியர்கள் கோவில்களை இடித்தும், விக்கிரகங்களைத் தகர்த்தும் அடாது செய்யும் தன்மை நோக்கி, கஞ்சி காமாட்சி விக்கிரகத்தையும் அப்போதாண்ட தஞ்சை மன்னனால் தென்னாட்டுக்குக் கொண்டு வரப்பட்டு கும்பகோணத்துக்குச் சமீபமான வோரிடத்தில் பூமியில் புதைத்துப் போற்றப்பட்டதென்றும் அதன் நிலையை இப்போது அறிய சாத்திய மில்லை என்றும் அனுமானிக்கிறார்கள். தென் தேசத்திலுள்ள பலவகைப் பட்ட சாதியினர் ஒவ்வொருவரும் அவரவர் பட்டயங்களை காஞ்சியி லிருந்து பெற்றதாகவே புலப்படுகின்றது. சங்கரர் காலத்திலும் இராமனுஜர் காலத்திலும் அந் நகரில் பலத்த மாறுதல்கள் உண்டாயிருக்க வேண்டு மென்று கருதப்படுகின்றது. ஊன்றி நோக்குவோமானால் தெரியும் உண்மைகள் பல. (தொடரும்.)

வைத்தியப் பகுதி.

தமிழ் சித்த வைத்தியம்.

(ஸ்ரீமான், "வைத்தியபூபதி" ஆ. கணபதியாபிள்ளை எழுதியது.)

அன்பர்களே!

நம் நாடு தமிழ் நாடு. இந்நாட்டில் தொன்றுதொட்டு வழங்கி வருவது தாய் பாஷையாகிய தமிழும் சித்த வைத்தியமும் என்பது நாம் நன்கறிந்ததே. இவ்விரண்டையும் தமிழரசர் தழைத்தோங்கிய காலத்தில் பல வகையிலும் ஆதரித்துவந்தார்கள். அதனால் அவை சிறப்புற்றோங்கின. இக்காலத்தில் அவை ஆதரிப்பாரின்மையால் ஒளி மழுங்கியிருக்கின்றன. நாட்டு வைத்தியத்தின் முன்னேற்றத்திற்காகக்கூடிய பல மகாநாடுகளின் பயனாய் அரசாங்கத்தாரும் சித்தவைத்தியம், யூனானி வைத்தியம், ஆயுர் வேத வைத்தியம் ஆகிய மூன்றையும் ஆதரிக்கும்படி நேர்ந்தது. இவற்றை ஆதரிக்க நேர்ந்ததில் முப்பதினாயிரம் ரூபாய் வரை அனுமதி செய்து கற்றுக்கொடுக்க வேண்டிய பள்ளிக்கூடம் சென்னையில் ஏற்படுத்தியிருப்பதில் சித்தவைத்தியம் கற்றுக்கொள்ளப் பிள்ளைகள் அறுபதும், யூனானி வைத்தியத்திற்கு முப்பதும், ஆயுர்வேத வைத்தியத்திற்கு நூறும் பயின்று வருகிறார்கள். இவற்றில் எல்லா வைத்தியத்திற்கும் சமத்துவம் ஏனிருக்கக்கூடாது?

மானிடப் பிறவியினராகிய நம்மவர்க்கு நல்வழி காட்டி மகிழ்வுற்று வாழும்படி செய்தவர்கள் நம் நாட்டுப் புலவர் பெருமான்களாகிய 'தமிழ் சித்தர்கள்' என்பது யாவரும் அறிந்த உண்மை. தெய்வப் புலமை வாய்ந்த

அவ்வான்றோர்களின் உயர்ந்த கருத்துக்களை நம்மவர் அறிந்துகொள்ள இரண்டு வழியுண்டு. ஒன்று கல்வி, மற்றொன்று கேள்வி. கேள்விச் செல்வத்தை நாம் எப்போதும் அடைவது கூடாமையால் கல்வியால் அறிவதே சுலபம். கல்விக்குத்துணையாய் விளங்கும் நூல்கள் அனந்தம். அவைகளில் முதல்தர அறிவுநூல்களாக வைத்தியம், யோகம், ஞானம் என மூன்று. மக்கள் உடல்நலம் பேணும் வழிகளில் சித்தவைத்திய முறைகள் மிகச் சிறந்தவை. அதில் மணி, மந்திரம், ஔஷதம் என மூவகை. சிகிச்சையிலும் தேவ சிகிச்சை, மானிட சிகிச்சை, ராட்சத சிகிச்சை என மூவகை. இம்முறைகள் நோய் அணுகவொட்டாமல் காக்கும் பல வழிகள், உணவுப் பொருள்களின் உயர்வு தாழ்வுகள் முதலியவற்றைப் போதிக்கின்றன.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும் முதுமொழிக்கிணங்க உலகோர் துன்பம் நீங்கி இன்பம் பெறக்கருதி, சூரியனைக்கண்ட பனிபோல் நோய்கள் நீங்கி ஓடும்வண்ணம் உயர்ந்த சஞ்சீவிகளைத் தயார் செய்யும் முறைகளையும், செய்பாகம், கைபாகம் முதலியவற்றையும் அறிந்து கொள்ளவேண்டிய நூல்களை இயற்றிய அகத்தியர், புலத்தியர், மச்சமுனி, கோரக்கர், கொங்கணவர் முதலான பதினெண் சித்தர்கள் வாசம் செய்தது தென் பாண்டி நாட்டில். அவர்கள் பரிபாஷையாய் கவிகளை வட்டுப்பாண்டி, கால்தாண்டி, கழச்சி முதலிய விளையாட்டுக்களில் குருவின்றியே குழந்தைகள் பாடும்படியாக அமைத்துள்ளார்கள். "பாண்டி விளையாடுகிற அந்த முறை பாரு" "தாண்டி விளையாடுகிற அந்த முறை பாரு" என்றும் "தும்பை துளசி தூக்கிப் போட்ட மண்வெட்டி" என்றும் பரிபாஷையில் பலமுறைகளைச்செய்து வைத்திருக்கிறார்கள்.

தமிழ்வைத்திய முறைகளிலுள்ள மருந்துகள்யாவும் அமிர்தமேயாம். அம்முறைகளின் மருந்துகள் நம் நாட்டாரின் சரீர அமைப்புக்கும், பூமியின் சீதோஷ்ண நிலமைக்கும் உரித்தானவைகள். இம்முறைகளைப் பரிபாஷையில் ஆராய்ச்சி செய்தபின் மருந்துகள் செய்தல் நன்று. நன்றாய் அறியாமல் செய்வது முறைகளின் குற்றமன்று, செய்பவர் குற்றமேயாகும்.

ஸ்ரீ சுப்பிரமணிய சிவத்தின்
ஜீவிய சரித்திரம்.

தாரண௵ புரட்டாசி௴ 20௳ — குரோதன௵ ஆடி௴ 8௳

"தேசபக்தன்" எழுதியது.

நமது தமிழ் நாட்டின் அரும் பெருந் தலைவராயும், தேர்ந்த இராஜதந்திரியாயும், தேசாபிமானச் சிங்கமாயும், மதாபிமானத்திற்சிறந்தவராயும் விளங்கிய காலஞ்சென்ற ஸ்ரீசுப்பிரமணிய சிவத்தைப்பற்றி யறியாதார் தமிழ்நாட்டில் இரார். தென்னாட்டில் ஸ்வதந்திரம் என்கிற நினைப்பை முதலில் உண்டுபண்ணிய இருவர்களுள் இவர் ஒருவர் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இவருடைய ஜீவியகால சம்பவங்களை ஒருங்கு சேர்த்து சுருக்கமாக நான் கண்டும் கேட்டும் உள்ளபடி இங்கு எழுதுகிறேன்.

இவர் கி. பி. 1884-ம் வருஷத்துக்குச் சரியான தாருண வருஷம் புரட்டாசி௴ 20௳ பௌர்ணமியன்று சந்திர கிரகணம் பிடிக்கப் போகின்ற சமயத்தில் மதுரை ஜில்லாவைச் சேர்ந்த வத்தலக்குண்டு என்னும் கிராமத்தில் பிறந்தார். இவருடைய பிதாவின் பெயர் ராஜம் அய்யர், மாதாவின் பெயர் நாகம்மாள். இவர்களுடைய குடும்பம் தனத்தில் பெருத்த தன்றாயினும், ஏழ்மையில் ஆழ்ந்ததுமன்று. இவருடைய பிதா மகா தைர்யசாலி, எதையும் லக்ஷியம் செய்யாதவர், நல்ல பலசாலி; எந்த விஷயத்திலும் கண்டிப்பான குணமுடையவர். ஆனால், இவர் பிறந்த சிலமாத காலத்தில் இவருடைய பிதாவுக்கு நல்ல வாலிப வயதாகையால், பால்ய சேஷ்டைமிகுதியால் குடும்பத்தைவிட்டு ஊர் சுற்றப் புறப்பட்டுவிட்டார் இவர் தந்தை. நான்கு வருஷங்கள் அவர் அம்மாதிரி வீட்டுக்கு வராமலிருந்தார். இவருடைய தாயின் பிதா அய்யம்பாளையம் என்னும் கிராமத்தில் கிராம முனிசீபாயிருந்தார். அந்த கிராமத்திலும் சுற்றுக் கிராமங்களிலும் அவருக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. இவருடைய மாதா தமது பிதாவினிடமே இருக்கவேண்டியதாயிற்று. அப்பொழுது இவருடைய பாட்டனாரும் மாதாவும் இவரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். இவருடைய பாட்டனார் கிராம முனிசீபாகையால், சில சமயங்க

ளிலே குடிகளிடமிருந்து வசூல் செய்த பணத்தை யெல்லாம் குவித்து வைத்துக்கொண்டு எண்ணுவார். அப்பொழுது ஸ்ரீசிவம் தவழ்ந்து விளையாடிக்கொண்டே வருவார். பாட்டனார் அங்கு குவித்துக் கிடக்கும் பலவித நாணயங்களைக் காட்டி, "அப்பா, உனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்" என்பார். ஸ்ரீ சிவம் நாணயங்கள் எல்லாவற்றையும் புரட்டிப் புரட்டி ஒரு பைசாவைத் தேடி யெடுத்துக்கொள்வார். "இவனுக்குப் பணத்தின் மீது ஆசையே யில்லை" யென்று பாட்டனார் பேரனைக் கட்டி யணைந்து மகிழ்வார்.

இவருக்கு நான்கு வயதாயிருந்த பொழுது, தொட்டிலில் படுத்துக் கொண்டிருந்தார். இரவு காலம். பாட்டனாரும் மாதாவும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். ஒரு புராணீகர் மார்க்கண்டேய சரித்திரத்தைப் படித்துக்கொண்டிருந்தார். குழந்தையும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. ஆனால் ஒன்றும் விளங்கவில்லை. பொழுது விடிந்தவுடன் குழந்தை பாட்டனாரை நோக்கி, "தாததா, ராத்திரி என்னமோ படித்தார்களே, அதென்ன?" என்று கேட்டது. பாட்டனார், "அபபா, உன்னைப்போல ஒரு குழந்தை பரமசிவனை நோககி பூஜை செய்து சாகாத வரம் பெற்றான். இந்தக் கதையைத்தான் இராத்திரி படித்துக் கொண்டிருந்தோம்" என்றார். குழந்தை "அப்படியானால் நானும் பூஜைசெய்யலாமோ? அந்தப்பரமசிவன் எங்கே இருக்கிறார்?" என்று கேட்க, பாட்டனார் ரிஷபவாஹனாரூடராய் பார்வதி சமேதராயுள்ள பரமசிவன் அமைந்துள்ள மரப்பாவை யொன்றைக் குழந்தை கையிலே கொடுத்து, "இது தான் பரமசிவன்; நீ பூஜை பண்ணு" என்று சொன்னார். ஸ்ரீசிவம் அதை ஒரு அறையில் கீழே சுத்தம் செய்து மணையிட்டு அதில் வைத்து, தினந்தோறும் காலையில் எழுந்தவுடன் கொல்லையிலே போடப்பட்டிருந்த காய்கறிச்செடிகளின் புஷ்பங்களை யெல்லாம் கொண்டுவந்து வைத்துக்கொண்டு, "பரமசிவனே! உனக்கு பூஜை பண்ணுகிறேன், பரமசிவனே, உனக்கு பூஜை பண்ணுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அந்தப் புஷ்பங்களை எல்லாம் எடுத்து அந்த மரப்பாவை மீது போடுவார். தாயார் அல்லது பாட்டனார் ஏதேனும் குழந்தைக்கு தூட்டுக் கொடுத்தால்,

ஸ்ரீசிவம் அதை யெடுத்து அடுத்த வீட்டுக் கடைக்குச் சென்று கர்ப்பூரம் அல்லது சாம்பிராணி வாங்கிவந்து ஸ்வாமிக்கு தூப தீபம் காட்டிவிடுவார். ஏதேனும் தின்பண்டம் கொடுத்தால், ஸ்வாமிக்கு முன்னே கொண்டுபோய் வைத்து நைவேத்தியம் செய்து, "ஸ்வாமி, நீ சாப்பிடு" என்று சொல்லிவிட்டுப் பின்னர் தான் அதைத் தாம் தின்பார். (தொடரும்)

பத்திரிகா அபிப்பிராயங்கள்.

நவசக்தி (மார்கழி ௨௨):- உதயபாரதி.

"இப்பெயர் கொண்ட சிறந்த மாதப்பத்திரிகையின் முதல்மூன்றிதழ்கள் வரப்பெற்றோம். இவ்விதழ்களில் வெளியாகியுள்ள கட்டுரைகள் அறிஞர்க்கு விருந்தாவன என்று கூறுதல் மிகையாகாது. டால்ஸ்டாய், மாஜினி என்னும் மேற்றிசை அறிஞர் கட்டுரைகளின் மொழிபெயர்ப்புக்களுடன், தமிழறிஞர்களின் சீரிய கட்டுரை பலவும் இப்பத்திரிகையை அணி செய்கின்றன. தமிழிலக்கிய வளர்ச்சிக்கு இத்தகைய பத்திரிகைகள் பல இன்றியமையாதன என்று கூறவேண்டுவதில்லை. இப்பத்திரிகையின் ஆசிரியர் ப. இராமசுவாமி ஐயங்கார்."

குமரன் (மார்கழி ௮௨):- உதயபாரதி.

"பாலபாரதி யென்ற பெயர்பூண்ட ஓர்உயர்தர மாதாந்தப்பத்திரிகை காலஞ்சென்ற ஆசிரியர் வ. வெ. சு. ஐயர் தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர் காலஞ்சென்றபின், அப்பத்திரிகையும் வளர்ச்சி குன்றி அழிந்து போயிற்று. இப்போது அப் பத்திரிகையின் பெயரையும் நம் தேசபக்த கவியான பாரதியின் பெயரையும் ஒருங்கே நினைப்பூட்டும் 'உதயபாரதி' திருநெல்வேலியினின்று தோன்றுவது. இதற்கு ஆசிரியராக அமைந்த திருவாளர் ப. ராமஸ்வாமி ஐயங்கார் தேசீய நோக்கும் தியாக உணர்வும் செந்தமிழ்த் தெள்ளமிர்தின் பால் பெருந்தாகமு முடைய இளந்தமிழருள் ஒருவர். பத்திரிகையின் பெயரும் அமைப்பும் உள்ளடக்கமான பொருளும், ஆடம்பரமற்ற அழகு சுமந்து மிளிர்கின்றன. தாய் மொழியும் தாயகமும் தழைக்க இப்பத்திரிகை நற்றொண்டு புரியுமென நம்புகிறோம்.